செ.வெ.எண்.335 நாள்.14.07.2017

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2017–2018 ஆம் ஆண்டிற்கு மாணவ –மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதி அட்டையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., வழங்கினார்.

********************

தமிழ்நாடு முழுவதும் பள்ளி, கல்லூரி மற்றும் ஐடிஐ –யில் பயிலும் மாணவ மாணவியருக்கு கல்வி பயில்வதில் எந்த சிரமங்களும் இருக்ககூடாது என்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் பள்ளிகளுக்கு சென்று வர சிரமம் இருக்கக்கூடாது என்கிற வகையில் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். மேலும், பேருந்தில் பயணம் செய்து பள்ளி, கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் ஏழை, எளிய மாணவர்களின் பொருளாதார பற்றாக்குறை காரணமாக அவர்களுக்கு போக்குவரத்து செலவை தீர்க்கும் வகையில் இலவச பேருந்து பயண சலுகையை அரசு வழங்கி வருகிறது.

அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான இலவச பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் இன்று பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா பேருந்து பயண அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 307 பள்ளிகளில் பயிலும் 52,783 மாணவ, மாணவியரும், 9 கல்லூரிகளில் பயிலும் 3455 மாணவ, மாணவியர்களும், 2 ஐடிஐ –யில் பயிலும் 926 மாணவ, மாணவியர்களும் விலையில்லா பேருந்து அனுமதி அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டல துணை மேலாளர் (வணிகம்) திரு.A.தியாகராஜன், பள்ளி தலைமையாசிரியர் மற்றும் கிளை மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.